உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௮.] 1919௵ ஆகஸ்டு௴ [பகுதி ௮.

## அன்புடைமை.

அன்புடைமையாவது காதல் உடையனாதல். யாரிடத்தோவெனின், தொடர்புடையாரிடத்து ஆகும். தொடர்புடையார் எவரோவெனின்,

"சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தினூங்கு
ஆக்க மெவனோ வுயிர்க்கு"

என்ற புத்தி போதிப்பின் படி. துறக்கவின்ப முதலாகிய செல்வத்தைத் தரும் இல்லறத்தைக் கைக்கொண்டு அதற்குத் துணையாகக்கொண்ட வாழ்க்கைத் துணைவியரும், அத்துணைவியாரிடத்தே தோன்றிய புதல்வர் முதலாயினரும் ஆதும். வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியின்மீது அன்பு செலுத்தானாயின் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்கின்ற ஐம்புலத்தினையும் ஓம்புதல் முடியாதது ஆகும். புதல்வரிடத்தே அன்பு செலுத்தாவிடின் "தந்தை மகற் காற்று நன்றி அவையத்து, முந்தியிருப்பச் செயல்" என்றபடியும், "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னுஞ் சொல்" என்றபடி கல்வியுடையவராகவும், பிதிர்க்கடனை இயற்றும் ஆற்றல் உடையவராகவும் இருக்கமுடியாமற் போம். அன்றியும் இவ்வன்பு மேற்சொல்லியபடி தொடர்புடையார்க்கண் செலுத்தி வருவானாயின் அதுவே அருளாகிப் பலரிடத்தும் அன்பு செலுத்தப் பயன்படும். ஆனால் இவ்வன்புடைமை அளவாகக்

காண்கின்றோமேயன்றி காட்சி அளவைக்காயினும் அனுமான அளவைக்காயினும் வெளிப்படுமோவெனின் அனுமான அளவையால் வெளிப்படும் என்பது உறுதியாகும். அது எவ்வாறோவெனின் அன்பு செலுத்தினான் ஒருவன்தான் எவர்மீது அன்புசெலுத்தினானோ அவர்க்கு ஒரு துன்பம் வந்த காலத்துத் தன்னை யறியாது அவன் கண்கள் நீரைப்பொழிகின்றன. இதற்கு மனைவியையும் குழந்தைகளையும் நள்ளிருளில் நடுக்காட்டில் விட்டுப் பிரிந்த நளன், தான் உருமாறி தன் கீழ்ப்பட்ட அரசன் ஒருவனுக்கு தேர்ப்பாகனாகி, அவ்வரசன் தமயந்தியின் இரண்டாம் சுயம்வரத்தைக் காணச்சென்ற காலத்துத் தேர்ப்பாகனாகச் சென்ற இவன் தனது குழந்தைகளைத் தானிருந்த தேர்ச்சாலையில் வரக்கண்டு, தான் தன்னை யின்னானென்று ஒருவருக்கும் அறிவிக்க மனமில்லாதவனாக விருந்தும், அவன் கண்கள் அவனை யறியாது நீரைப்பெருக்கின என்பதே போந்த உதாரணமாகும்.

இது கருதியன்றோ, “அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ் ஆர்வலர், புன்கணீர் பூசல் தரும்’ என்ற பொய்யாமொழியும் எழுந்ததாகும். இவ்வன்புடைமையைச்செலுத்த வேண்டுமாயின் ஒருவன் தனக்குள்ள இடம் பொருள்ஏவல் முதலியவற்றைத்துணையாகக்கொண்டு செய்வதேயன்றி தம்மையும் அயலவர்க்கு ஒப்புவிக்கும் தகுதியுடையவராகவும் சிலர் ஆகின்றனர். இதனைத் தேவரும் அசுரரும் தம்மிடத்தே வைத்த ஆயுதங்களை விழுங்கி அவைகள் முதுகந்தண்டில் ஒன்றாகச் சேர்ந்திருந்தமை அறிந்த இந்திரன் தனது கூட்டத்தவரோடு சென்று அம்முதுகந்தண்டை யிரந்த காலத்துத் தன்னுடலை ஒரு பொருளாகக் கருதாது விருத்திராசுரன் என்பானைச் செயிப்பதற்குக்கொடுத்த ததீசியையும், இந்திரன் பருந்தாகவும், அக்கினி புறவாகவும் தன்னைச்சோதிப்பான் பொருட்டு, அக்கினியாகிய புறவு தன்னிடத்தே வந்து அடைக்கலம் புகுதலும் இந்திரனாகிய பருந்து ‘என்னுடைய இரையை நீ யாதரிப்பது தகுதியாகாது என்னிரையை எனக்குத் தந்துவிடு” என்று கேட்டலும் வேள்வியினைச் செய்துகொண்டிருந்ததையுங் கருதாது, புறவின் எடைக்குத் தன் தசையைக்கொய்து தருவதாகக்கூறித் துலையின் ஓர்தட்டில் புறவினையும் மற்றோர்தட்டில் தன் தசை முழுதுங் கொய்துவைத்தும் புறவின் எடைக்குச் சரிப்படாமையால் தானே எலும்புக்கூடுடன் அத்துலையின்மீது ஏறிநின்ற சிபியையும் காண்டலே போதுமானதாகும். ஈதறிவான் பொருட்டன்றோ,

“அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு”

என்றருளியதாகும். அன்றியும் இவ்வன்புடைமையை நாடோறும் ஒருவன் தொடர்புடையாரிடத்துச் செலுத்தி வருவானாயின், செய்த அன்பானது அவரிடத்தே யன்றி பிறரிடத்தும் விருப்பம் உடைமையைத் தருவதாகும். அவ்விருப்பமுடைமையோ பலரையும் நண்பினர் ஆக்குகின்றது. அந்நட்போ அளவிடக் கூடாத சிறப்பைத் தருகின்றது. இதனைத் தன் மனைவியோடு சூதாடித் தான் வந்தகாலத்து எழுந்து ஓடியஅவளது வஸ்திரத்தைப் பற்றி இழுத்தலும் அவளணிந்திருந்த (மேகலாபரணங்கள் இற்றுவிழக்) கோவையாக இருந்த அம்மணிவடம் பலமணிகளாகச் சிதறக் கண்டும்அவ்விதம் செய்ததன் நண்பினனாகிய கர்ணனை நோக்கி, 'நன்மணியைக்கோக்கோ பொறுக்குகோ' என்ற துரியோதனனையும், தாம் நட்புச் செலுத்திய சினக்கண்முதலியார் உயிர்நீத்த காலத்து உடன்கட்டையேறிய மனைவியுடன் அழல்பட்டு எரிகின்ற சிதையினிடஞ்சென்று,

"அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆயிழையோ
டின்றுநீ வானுலகம் எறினாய்—மன்றல்கமழ்
மானேக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்
சினக்கா செல்லக்கிட"—

என்று கூறி தமக்கென்று இடம்விட்ட அவ்விருவர் நடுவில் விரைந்து சென்று விழுந்து உயிர்நீத்த் பொய்யா மொழிப்புலவரையும் காணுதலே பொருந்தும. இதனை யறிவிப்பானன்றோ,

"அன்பீனும் ஆர்வமுடைமை யதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

என்று அருள்சுரந்ததாகும். அன்றியும் இவ்வன்புடைமை | நன்னெறியாகிய அறம் ஒன்றையே செய்வதற்குத் துணையாகக் கொள்ளாது ஒருவனுக்குப்பகைமை பற்றி மனத்தினிடத்தே மறம் நிகழ்ந்த காலத்தும் அவனை நட்பினனாக எண்ணி அவன்மீதும் அன்புசெலுத்த இது துணையாகின்றது. இதனை, தம்மிடத்துப்பகைகொண்டு, தம்மைவெல்லக்கருதிச் சைவவேடம் பூண்டுவந்த மாற்றவன் தம்மிடத்துச் செய்யத் தகாத பெரியதோர் காரியத்தைச் செய்தகாலத்தும், தம் உயிர்க்காவலனாகநின்ற தத்தனை நோக்கி, 'தத்தா நந்தமர்' என்று கூறி, தம் உயிர் போகும்படிசெய்த அப்பாதகனையும் நகரத்துக்கு வெளியே துணையோடு செலுத்தித் துணையுடன் விட்டுவந்த தத்தனைநோக்கி "ஐயன்செய்தது இன்று எனக்கு யார்செய்தார்" என்று அருள்செய்து இறைவன் திருவடியை யடைந்த மெய்ப்பொருள் நாயனாரையும், வாட்போரில் தம்மை வெல்ல மாட்டாதவனாய் விபூதிய

ணிந்து சமீபிக்கின்றவரையில் முகத்தை மறைத்துப் பின்னர் விபூதியைக் காணும்படிசெய்தலும் இவர் நம் தமரென்றெண்ணித்தம்மைவெட்டி வெல்லும்படி இடந்தந்த ஏனாதி நாயனாரையும் போற்றுலே பொருந்தும். இது கருதியன்றோ "அறத்திற்கே அன்பு சார்பென்ப வறியார், மறத்திற்கு மஃதே துணை" என்று கூறியதாகும். அன்றியும் இவ்வன்புடைமை மேற்கூறியபடி தொடர்புடையாரிடைமாத்திரம் நில்லாது பலரிடத்தும் செல்வதுடன் பின்னர் ஓரறி யுயிராகிய புல் முதலியவிடத்தும் செல்கின்றதாகையால் அதுவே அருளாகிப் புலால் மறுத்தல் முதல் கொல்லாமையீருகிய விரதங்களைச்செய்து நிலையாமை யுணர்ந்து துறவுபூண்டு மெய்யுணர்ந்து பிறவிப்பெருங்கடலை நீந்தி யிறைவனடியைச் சேருவதற்கும் காரணமாகின்றது. இது கருதியே

"அன்பும் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாருமறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே"

என்று திருமந்திரம் கூறியது.

ஆதலால் சிவபெருமான் திருவடிக்குத் தொண்டு பூண்டு அவனடியராய் வாழ எண்ணிய நாம் "வேம்பினைப்பேசி விடக்கினை யோம்பி வினைபெருக்கித் தூம்பினைத் தூர்த்துச் சுற்றந்துணை" யென்று இராது அவன் சாம்பலைப் பூசி அவனடிக்கீழ்த் தொண்டு செய்வதற்கு அன்புடையவராக அமர்வோமாக. சுபம்.

பத்திராதிபர்.

79

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாரூர் நான்மணிமாலை யுரை.

---o:---

தொகுதி - 8 - பகுதி - 7 - பக்கம் - 151 - தொடர்ச்சி.

நேரிசை வெண்பா.

" என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயின்
முன்பணிந்த தெய்வ முனிவோர்க—ளன்பென்னும்
புண்சுமந்தோ'நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரென்றுருகு வர்"

(இ-ள்) என்பு அணிந்த = எலும்புமாலையைத் தரித்த, தென்கமலை = தெற்கேயுள்ள திருவாரூரின்கண் எழுந்தருளிய, ஈசனார் = சிவபெருமான், பூங்கோயில் முன் = அழகிய திருக்கோயிலின் முன்பாக, பணிந்த = வணங்கிய, தெய்வமுனிவோர்கள் = தெய்வத்தன்மையுடைய முனிவர்கள், நந்தி புடைத்து = நந்திமாதேவர் பிரம்படிபட்டு, புண்சுமந்தோம் = புண்பட்டோம், என்னார் = என்றுசொல்லமாட்டார், (ஆனால்) மண்சுமந்தாரென்று = திருவாதவூரரின் பொருட்டு திருமுடிமேல் மண்ணினைச் சுமந்தாரென்று, உருகுவர் = மனம் உருகுவர், புண்ணியனார் = புண்ணிய சொரூபிகளாகிய இம்முனிவர்களது, அன்பு என்னும் = அன்பின் தகுதி இருந்தவாறு என்னேயோ! (என்றவாறு)

பிரமவிட்டுணுக்கள் ஆயுள்முடிந்து இறந்தகாலத்தே அவர்களது என்பை அடையாள மாலையாகத் தரிப்பது பெருமானுக்கு இயல்பு. ஆதலால் 'என்பணிந்த ஈசனார்' என்றனர். இதனை 'நங்காய் ஈதென்ன தவ நரம்போ டெலும்பணிந்து, கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ, கங்காள மாமாகேள் காலாந்தரத்திருவர் தங்காலஞ் செய்ய தரித்தனன்காண் சாழலோ" என்னுந் திருவாக்கால் அறிதல் வேண்டும். சிவதரிசனத்தின்பொருட்டுக் காலம்நோக்கிச் சென்று தரிசிக்குஞ்சமயத்து

நந்திமாதேவர் தம்கையிற் பிரம்புகொண்டு தேவர்களை வரிசையாக இருக்க ஒச்சுவது வழக்காதலால் அக்குறிப்புத்தோன்ற 'நந்திபுடைத்துப் புண் சுமந்தோம் என்னார்' என்றனர். இதனை 'வந்திறை யடியிற்றாழும் வான வர் மகுடகோடி பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப் படையால்தாக்கி, அந்தியும் பகலுந் தொண்டர் அலகிடும் குப்பையாக்கும் நந்தியெம் பெருமான்பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்'' என்னுந் திருச்செய்யு ளானுணர்க சிவபெருமான் அடியார் பொருட்டு எதையும் திருவருள் புரிவர். தம் மடியவராய திருவாதவூரரின் பொருட்டுத் திருமுடிமேல் மண்சுமந்து திருமேனியில் பிரம்படியும் பட்டனராதலால் தெய்வ முனிவர்களுருகினர் என்பது போதர 'மண்சுமந்தாரென் றுருகுவர்' என் றருள் செய்தனர்,

## கட்டளைக் கலித்துறை.

வரந் தந்தருள வரதம் வைத்தாலென் வரதமிடக்
கரந்தந்த தாலிவர் கையதன் றேபலி காதலித்துச்
சிரந்தந்த செங்கைக் கமலேசர் நாமந் தியாகரென்ப
தரந்தந்த வாள்விழி யாடந்த தாங்கொ லறம்வளர்த்தே.

(இ—ள் வரம் = வரத்தினை. தந்து அருள = அடியார்க்கு அருள் செய்ய வரதம்வைத்தால் என் = ஈதலைச்செய்யும் வலக்கரத்தினை இச்சை த்திருமேனியிற்கொண்டு என், வரதம் ஈதலை, இடு = செய்கின்ற, அக்கரம் ஸ்ரீ பஞ்சாட்சரமானது, தந்ததால் = அடியவர்க்கு அருள்செய்வதால், பலிகாதலித்து = பிச்சையை இச்சித்து, சிரம்தந்த = பிரம கபாலத்தை யேந்திய, செம் கை கமலேசர் = சிவந்த தாமரைபோன்ற திருக்கையினை யுடைய திருவாரூரரது, நாமம் = திருநாமம், தியாகர் என்பது = தியாகப் பெருமான் என்று உலகோர் கூறுவது, அரம்தந்த = அரத்தால் செய்த வாள்விழியாள் = வாள்போலும் திருவிழியை யுடையாளாகிய உமாதேவி யார், அறம் வளர்த்தே = முப்பத்திரண்டு தருமங்களையும் கச்சிமாநகரிற் செய்து, தந்தது ஆம் = கொடுத்தது ஆகும். (அதுவன்றி) இவர்க் கைய தன்றே = இவரது திருக்கரம் அல்ல. எ-று.

பெருமான் உயிர்க்கு உயிராய்த் தழைத்து தம்மடியவர் பொருட்டு இச்சைத் திருமேனி தாங்கி சத்திநிபாதம் அடைந்த அடியார்க்குத் தம் பிராட்டியாரைக்கொண்டு யாவும் அருள்செய்வர் என்பது தோன்ற இச் செய்யுள் கூறியதாகும். பிச்சையேற்கின்ற பெருமான் தியாகன் எனப் பெயர் தாங்கியது இடப்பாகம் வாய்ந்த உமாதேவியின் நல்லறத்தால்

என்று கூறியது, இல்லறத்தான் ஒருவன் தனக்கு வாழ்க்கைத் துணைவியாக அடைந்த மனைவியின் நல்வினையால் எல்லா நன்மைகளையும் அடைகின்றான் என்று உலகோர் ‘ஏர் பிடித்தவன் என்செய்வான் பானைபிடித்தவள் பாக்கியம்’’ என்று கூறுகின்ற உலகவழக்கை தெரிவிப்பதுபோல் அருட்சத்தியே எதற்கும் காரணம் என்று அறிவித்தலுடன் நிந்தாஸ்துதியாகவும் கூறியதாகும்

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர் தலைமாலை சிரமாலையாகக் {சாத்த
கொள்ளுவது மலர்மடந்தை கொழுநர்தலை கிண்கிணியாக் கோத்துச்
உள்ளுவதுமொழிவது மற்றொழியாயே லடிமுடிக ளுணர்ந்தேமென்றே
கள்ளமொழி வான்புகிற் றென்கமலேச வவர்க்கவையே கரியுமாமே,

(இ-ள்) வள்ளம் = கிண்ணம்போலும், முலை = தனங்களையுடைய, கலைமடந்தை = வாணியினது, மகிழ்நர் = கணவராகிய பிரமர்களது, தலைமாலை = பல தலைகளாலாகிய மாலையினை, சிரமாலையாக கொள்ளுவது = சிரத்திலணிந்து கொள்ளும் மாலையாக தரித்துக்கொள்ளுவது. மலர்மடந்தை = இலக்குமி தேவியினது, கொழுநர்தலை = நாயகராகிய விஷ்ணுமூர்த்தியின் தலைகள். கிண்கிணியா = திருவடிக்கு அணியும் ஆபரணமாக, கோத்து = கோவைசெய்து, சாத்த = தரிக்கும்படி, உள்ளுவது = எண்ணுவது ஆக, இருக்க, மொழிவது மற்று = இதற்கு வேறாகக்கூறுகின்ற மற்றவர்களது இறுமாப்பை, ஒழியாயேல் = தேவரீர் அடக்காவிடினும், அடிமுடிகள் = தேவரீருடைய திருவடியும், திருமுடியும், உணர்ந்தேம் என்றே = அறிந்து உள்ளோம் என்று, கள்ளம் = வஞ்சகத்தை, மொழிவான்புகில் = சொல்லப் புகுவார்களானால், தென்கமலேச! = அழகிய திருவாரூர!, அவர்க்கு = அவ்வுரை கூறுவார்க்கு அவையே = அத்திருமுடியும், அத்திருவடியும், கரியும் ஆம் = சாட்சியாகும். ஏ-அசை,

ஊழிதோறும் இறக்கின்ற பிரம விட்டுணுக்களது தலைகள் தலைமாலையாகவும், கிண்கிணியாகவும் திருமுடியினும் திருவடியினும் பெருமான் தரித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தும், வேறு தேவருக்குப் பரத்துவங் கூறுவார் வஞ்சகத்தாற் கூறினரேனும் அவர் மனம் அவர்க்குச் சாட்சியாகும் என்பது கருத்து.

## நேரிசை ஆசிரியப்பா.

கருந்தாது கடுத்த பெரும்பணை தாங்கும்
படர்மருப் பெருமை பைங்குவளை குதட்டி
மடிமடை திறந்து வழிந்த பாலருவி
கரைபொரு தலைப்பப் பெருகுபூந் தடத்து
வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசிற்
பானீர் பிரித்துண் டேவென் னொகின
நூற்பெருங் கடலு ளுண்பொரு டெரித்து
நாற்பயன் தொள்ளு நாமகட் பொருவு
மென்பான் மருதத் தண்புனற் கமலத்
தென்பான் மேருவிற் றிகழுங் கோயின்
மூவரகண்ட மூர்த்தியென் றேத்துந்
தேவ ரகண்ட தெய்வ நாயக
நின்னடித் தொழும்பி னிலைமையின் றேனுநின்
றன்னடித் தொழும்பர் சார்புபெற் றுய்தலிற்
சிறியவென் விழுமந் தீர்ப்பது கடனென
வறியாயல்லை யறிந்து வைத்திருந்துந்
தீரா வஞ்சத் தீப்பிறப் பலைப்பச்
சோராநின்ற வென் றுயரொழித் தருள்கிலை
புறக்கணித் திருந்தனை யன்றே குறித்திடிற்
கோள்வாய் முனிவர் சாபநீர்ப் பிறந்த
தீவாய் வல்வினைத் தீப்பயன் கொண்மா
றுடல்சுமந் துழலுமக் கடவுளர்க் கல்லதைப்
பிறவியின் றுயர்கினக் கறிவரி தாகலி
னருளா தொழிந்தனை போலுங்
கருணையிற் பொலிந்த கண்ணுத லோயே.

(இ-ள்) கரும் தாது=கரிய இரும்பினை, கடுத்த-ஒத்த, பெரும்பணை=பெரிய தேகத்தையும், பார்மருப்பு = படர்ந்து நீண்ட கொம்பினையும், தாங்கும்=கொண்டு உள்ள, எருமை=எருமைகளானவை, பைகுவளை = பசிய குவளைமலரை, குதட்டி-தின்று, மடிமடை=முலைகளாகிய மடியினை, திறந்து=திரந்துகொண்டு, வழிந்த=வழிந்தோடிய. பால் அருவி=பாலாகிய அருவியானது, கரைபொருது=கரையை மோதி, அலைப்ப=உடைக்கவும் உள்ள, பெருகு=அதிகரித்த, பூதடத்து = புட்பம் நிறைந்த குளங்

களில், வெண்டோடு அவிழ்த்த=வெள்ளிய இதழ்கள் விரித்த, முண்டகத் தவிசில்=தாமரையாகிய இருக்கையில், பால்நீர் பிரித்து=நீரினைப்பிரித்து மிகுந்த பாலினை. உண்=குடிக்கின்ற, தூவெள் எகினம்=மிகுந்த வெண்மையாகிய அன்னப்பறவைகள், நூல் பெருங்கடலுள்=சாத்திரமாகிய பெரிய சமுத்திரத்தினுள், நுண்பொருள் தெரித்து=நுட்பமாகிய பொருளினையாய்ந்து, நால் பயன் கொள்ளும்=நான்கு பயனாகிய புருஷார்த்தத்தைக் கொள்ளும், நாமகள்=கலைமகளை, ஒருவும் யென்பான்=ஒத்திருக்கின்ற, மருதம்=மருதநிலம் சூழ்ந்த, தண்புனல் கமலை=குளிர்ந்த நீர்வளந்தங்கிய திருவாரூரின்கண், தென்பால்=தெற்கின் பக்கத்து, மேருவில் திகழும் கோயில்=மேருமலையை ஒத்திருக்கின்ற திருக்கோயிலிலே, மூவர்=பிரம விஷ்ணு ருத்திரர்கள், அகண்ட மூர்த்தியென்று=எங்கும் நிறைந்த இறைவன் என்று. ஏத்தும்=துதிக்கின்ற, தேவர் அகண்ட=தேவர்கள் விட்டுப் பிரியாத, தெய்வ நாயக=தேவ தேவனே! நின் அடித்தொழும்பின்=தேவரீருடைய திருவடிக்கு அடிமைத்தொழிலின், நிலைமையில்=தன்மையில், இன்று எனும்=அடியேன் இல்லையாயினும், நின்றன்=தேவரீரது, அடித்தொழும்பர்=திருவடிக்குத்தொண்டுபூண்டு ஒழுகுகின்ற அடியவர்கள், சார்புபெற்று-நட்பினையடைந்து, உய்தலில்=பிழைப்பதால், என் விழுமம்-என்னுடைய துன்பத்தினை, சிறிய தீர்ப்பது-சிறிதளவேனும் தீர்ப்பது, கடன் என=தேவரீரது திருவருட்கடமை யென்று, அறியாய் அல்லை-தேவரீர் அறியாதவர் அல்ல, அறிந்துவைத்து இருந்தும்=தேவரீர் திருவுள்ளத்தில் அறிந்தும், திரா-விட்டுநீங்காத, வஞ்சம்-வஞ்சகமுடைய. தீ பிறப்பு=கொடிய பிறவியானது, அலைப்ப—விடாது வருத்த, சோர நின்ற=சோர்ந்துபோகின்ற, என்=எனது, துயர்-துக்கத்தினை, ஒழித்து-நீக்கி, அருள்கிலை=திருவருள்செய்கிலை, புரக்கணித்துஇருந்தனை=தேவரீர் திருக்கண்கடாட்சியாதிருந்தனை, அன்றேகுறித்திடல்=நன்றாக ஆராய்ந்து பார்க்கும் அளவில், கருணையிற்பொலிந்த=திருவருள் விளங்கிய, கண்ணுதலோய்=நெற்றிக்கண்ணையுடைய பரமேட்டி, கோள்வாய்=நிறைமொழியையுடைய, முனிவர்=பிருகுமுனிவரது, சாபநீர்ப்பரந்த-சாபத்தீயினது, தீபயன்=துன்பத்தினை, கொள்மா=கொள்ளும்படி, உடல் சுமந்து உழலும்=தேகத்தைத் தாங்கி வருந்தும், அ கடவுளுக்கு அல்லது=அந்த விஷ்ணுமூர்த்திக்கு அல்லாமல், பிறவியின் துயர்-பிறவியால் உண்டாகும் துன்பம், நினக்கு=தேவரீருக்கு, அறிவு அறிது ஆகலின்=அறிதற்குக் கூடாததாதலால், அருளாது ஒழிந்தனைபோலும்=என் விடயத்துத் திருவருள் செய்யாது இருந்ததுபோலும். எ-று.

பிறவி என்னும் பெருங்கடலைத் தாண்டவேண்டுமாயின் இறைமைக் குணங்கள் எல்லாம் உடைய இறைவனாகிய சிவபெருமானை யன்றி மற்றப் பசுக்கள்போன்று பிறந்து இறந்து உழலும் திருமால் முதலிய தேவர்களை அடைதலிற் பயனில்லை யென்பார் 'கோள்வாய் முனிவர் சாபநீர்ப்பரந்த தீவாய் வல்வினை திப்பயன் கொள்மார், உடல் சுமந்துழலும் அக்கடவுளுக்கு அல்லதை பிறவியின் றுயர்நினைக்கு அறிவறிது' என்றனர். அருளிக் கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப்பயன்களையே பயக்கும் நிறைமொழி மாந்தர் முனிவராதலால் 'கோள்வாய் முனிவர்' என்றும் கூறினர்.

பத்திராதியர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## ஸ்ரீ மெய்கண்ட மயம்.

# சகலசாஸ்திர நிர்ணய சங்கிரகம்.

———— o: ————

தொகுதி - 8 - பகுதி - 7 - பக்கம் - 157 - தொடர்ச்சி.

இப்படியிருக்க தேவதாந்தரங்களிடத்திற் பத்திபண்ணுகிற ஆத்மாக்கள் மிகுதி சாம்பசிவனிடத்தில் பத்திபண்ணுகிற ஆத்மாக்கள் ஏகதேசமாகக் காணப்படுகிறதே யென்னிற் சுருதி சித்தாந்தத்தை சாத்திரத்திட்டி விசாரணை பண்ணாத குற்றமல்லால் வேறல்ல. அதற்கு காரணத்தை சொல்லுகிறோம். நந்திகேசுரர் கௌதமர் துருவாசர் அத்திரி பிருகு கண்ணுவர் இந்த ஆறுமகா ரிஷிகளும் ஒவ்வொரு காரணரைப்பார்த்து உங்களுக்கு சிவபத்தி திடமில்லாமற் போகக்கடவது என்று சபித்த கதையை புராணங்களிற் கண்டுகொள்க. இதுவல்லாமற் சரமசென்மியி லேகதேசமல்லோ. எல்லோரும் சாமசென்மியானாற் பிரபஞ்சமேது ஆத்மாக்களேது. ஆகையாற் சரமசென்மிக்கே சிவபத்தி திடம்படச் செனிக்கும் மற்றவர்க்குச்செனியாது ஆகையாற் சிவபத்திபண்ணுகிற சென்மம் ஏகதேசமென்றறிக. சிவனுடையசொரூப சுபாவங்களை வேதமுதலானதறிய மாட்டாமற்போயிற்று என்கிற சுருதியினாலும் அரியும் பிரமாவும் தேடி

க்காணமற் போனார்களென்கிறதினாலும் சகலமுமாராய்ந்த வியாசர் முதலியோர் தடமாதிக்கையெடுத்து நந்திகேசுரனுக் கிரகிக்கப்பட்டா ரென்கிற புராணத்தினாலும் சிவனுடையசொரூப சுபாவங்களை விசாரித்து பத்திவைக்கிற, புருடனார் சிவனுடைய கிருபையினாலே சிவபத்தி திடம்பட வேண்டும். அவர்கடாக்ஷிக்கிறது ஒருவிரதமுண்டு. அந்தவிரதம் சர்வோத்தமம். அந்தவிரதத்தை சகலநூல்களும் மிக்காகவேயெடுத்துச் சொல்லும். அது சகலதேவதைகளும் இருடிகளும் அனுட்டிக்கிறது. சகலருக்கு மகாமார்க்கம். அதற்குப் பேர்பாசுபதவிரதமென்று சகலசாஸ்த்திர நிர்ணயம். பாசுபதவிருத்தத்திற்கு நிர்வசனம் பசுபதிவிரதமானதினாலே பாசுபதவிரதமென்றுபெயர். அது சர்வோத்தமமென்றது மற்றவிரதம் பசுவிரதம். இதுபதிவிரதம். ஆகையாற் சர்வோத்தமமெனக் காலாக்கினி ருத்ர உபநிடதமும்\ கபாலியுபநிடதமும் பாரதமும் சகலபுராணங்களும் அதைச்சொல்லுகிறதிலனுட்டிக்கிறது. என்கிறதற்குப்பிரமாணம் நாராயணர் பிரமதேவர் இந்திரன் அக்கினி குபேரன் முதலானதேவதைகள் அந்தவிரதம்பூண்டு சாம்பசிவனை யுபாசித்து தங்கள் பதமடைந்தார்களென்கிற சுருதியினாலும் நந்திகேசுரர் துருவாசர் சண்டேசுரர் சனகாதி நால்வர் மார்க்கண்டர் ததீசி அகத்தியர் கௌதமர் சதானந்தர் பிருகு அத்திரி சவைசகர் பதஞ்சலி வியாக்கிரபாதர் உபமன்னியர் சுவேதகேது வாமதேவர் பிருங்கிருஷி இடபயோகி கற்கர் மாத்துவர் கண்ணுவர் மங்கனர் போதாயனர் வாலகில்லியர் விசுவாமித்ரர் ஆத்தாசாரியர் முதலாயஇருடிகள் அனுட்டித்து விதேககைவல்யமடைந்தாரென்று சகலபுராணங்கள் சொல்லுகிறதினாலும் விதேககைவல்யமடைந்தரிஷிகள் கதைபுராணங்களிலே மிகுதிஎண்ணிமுடியாது. ஆகையாற் சகலதேவதைகள் ரிஷிகளால் அனுட்டிக்கிற மகாமார்க்கமென்றேயறிக. மகாமார்க்கமென்றது சகலபாவத்தையும் போக்கும் சகலபோகத்தையுங் கொடுக்கும் சிவமுத்தியும் விதேககைவலியத்தையுங் கொடுக்கும் ஆகையால் மகாமார்க்கமென்றறிக. ஆகையால் பாசுபத்விரதப்பிரகாரமே யுபாசிக்கவேணும் அதேதென்னில் ஆகமப் பிரகாரந் தீக்ஷையடைந்து சதிபதிஞாயமாகச் சாம்பசிவனை யுபாசித்து பாசுபதமிரண்டுவிதம். அதுவேதப்பிரகாரமென்றும் ஆகமப்பிரகாரமென்றும் இரண்டுவிதம். அறியாதபேர் ஆகமப்பிரகாரமே பாசுபத விரதம் வேதமார்க்கமல்லவென்பார்கள். அப்படியானால் ஆகமத்துக்கே சிவன் தேவதையல்லால் வேதமார்க்கத்துக்கு சிவன்கர்த்தாவல்லவென்று போகவேணும் அவ்வுத்தரமல்ல. வேதத்திற்கு மாகமத்திற்குங் கர்த்தா

சிவனொருவனே. அவனையடைகிறதற்கு இரண்டுமார்க்கம் சிவனே வகுத்தாரென்று சைவபிராணம் சொல்லுகிறதை கண்டுகொள்க. ஆகமமார்க்கம் சமயம் விசேடம் நிர்வாணமென்றுஞ் சரியை கிரியை யோகஞானமென்றும் சாலோக சாரூப சாமீப சாயுச்யமென்றும் முப்பத்தாறு தத்துவத்திற்கும் அப்பாலிருக்கிற வஸ்துவினிடத்தில் ஆயிக்கியஞ்சொல்லும். மார்க்கந்தானே வேதமார்க்கம் இரண்டுபிரகாரமாயிருக்கும். அதிற்கருமகாண்டம் மூன்றுவிதம், தேதென்னில் யாகாதியினாலு பாசனையொன்றும் சூரியமண்டலத்தில் மந்திர அர்க்கியத்தினாலு பாசனையொன்றும் அவருடையூ தனுவில் விசேஷநைவேத்தியத்தினாலும் அர்ச்சனையினாலும் உபாசனையென்றும் ஆகமூன்றுவிதம். ஞானகாண்டமிரண்டுவிதம். அதேதென்னில் யோகமென்றும் ஞானமென்றும் இரண்டுவிதம், யோகத்திலும் ராஜயோகமென்றும் சிவக்ஞானயோகமென்றும் இரண்டுவிதம். ஆகயிது வேதமார்க்கம். யாகாதிகன்மத்திலுபாசியர் சிவனென்றுஞ் சூரியமண்டலத்தில் மந்திரார்க்கியத்தினாலுபாசியர் சிவனே யென்கிறதுஞ் சருவருமுபாசியரென்கிறது முபாசியர் சிவனேயென்கிறது முதலிலே விரித்துச்சொன்னதை கண்டுகொள்க. யோகத்தில் ராஜ்யோமாவது யோகசாத்திரம் சிவயோகமாவது போகசாஸ்திரம். சிவயோகமாவது முமூட்சுக்கள் சகலத்தையும்விட்டு தியானிக்கவேண்டியவஸ்து சிவமொன்றேயென்று சொல்லுகிற அதர்வணசிகா உபநிடதம் பிரகாரம் சிவேதநிட்டையிருக்கிறது. ஞானத்தில் ஆத்மக்கியானமாவது சிவனானது தத்துவ மிருபத்துனாலுங் கடந்து தன்னிலையே அசையாமனிற்கிறது. முத்தியென்றுசொல்லும் சிவக்கியானமாவது தத்துவமிருபத்துனாலும் இருபத்தைந்தாந்தத்துவம். ஆன்மா இருபத்தாறுந்தத்துவம் பரமான்மா. அதுசிவம் ஆத்மா இருபத்தினாலுதத்துவத்தையும்விட்டு இருபத்தியாறுந் தத்துவனாகவிருக்கிற சிவத்துடன் ஐக்கியமே முத்தியென்றுசொல்லும், இதற்குப்பிரமாணம் ஐந்தாம் வேதமாயிருக்கிற பாரதம் மோக்ஷதன்மத்தில் இருபத்தைந்தாந் தத்துவம் ஆன்மா, இருபத்தாறுந்தத்துவம் பரமாத்மா அது சிவம் என்று அநேகமிடத்திற் சொல்லிப்போயிற்று, ஆகையால் வேதமார்க்கப்பிரகாரம் அடையின் வஸ்து சிவனென்றே சகலசாஸ்திர நிர்ணயம். ஆகமப்பிரகாரம் தீக்ஷையும் தீக்ஷையிற் சத்திபத்தி ஞாயமும் ஆகமமார்க்கமேயல்லாமற் வேதமார்க்கத்துக்கு தீக்ஷையும் சத்தி பத்தி ஞாயமுமானாற் கருமகாண்டத்திற் சகலதேவதைகளையும் உபாசிக்க வேணுமே யதற்கு விரோதமல்லவோவென்னிற் ஆகமப் பிரகாரம் தீக்ஷை வேதமார்க்கத்து

க்கு அவசியமே. அதற்குப் பிரமாணஞ்சொல்லுகிறோம். வேதத்தில் விதித்த யாகாதி கன்மத்துக்கு சௌதப்பிரகாரம் தீக்ஷையடைந்து அர்த்தப்படியாகம் பண்ணினலொழிய மந்திரக்கிரியா பாவனைதெரியாது உபாசித்தாலே பாவனைபோல வீபூதி ருத்திராக்ஷதாரணம் பஞ்சாக்ஷரசெபம் சிவலிங்கபாவனை வைதிகத்தில் விதித்திருந்தாலும் ஆகமப்பிரகாரம் தீக்ஷையடைந்து உபாசித்தாலே மந்திரத்திற் கிரியாபாவனை தெரியும் மற்றபடி தெரியாது சிவகிருபையும் வரமாட்டாது. இதற்குப் பிரமாணம் கிருட்டிணதேவர் புத்திரகாமமாகச் சாம்பசிவனை வெகுகாலம் உபாசித்து பிரசன்னமாகாமலிருக்கையில் உபமன்னியபகவான் சிவார்ச்சனைக்கு புஷ்பம் கிடைக்கவில்லை என்று வந்து சீஷன்சொல்லுகையில் கிருட்டிண தேவர் அருச்சனை பண்ணிவிட்ட புட்பம் நதியிலே மிதந்து வருகையில் அதையெடுத்துவரச் சொல்லி அர்ச்சிக்கையில் அதைக்கண்டு கிருட்டிண தேவர் சங்கிக்கையில் ஆகமப்பிரகாரம் தீக்ஷையடைந்து மந்திரக்கிரியா பாவனையுடன் உபாசித்தாலே நிர்மால்யம். மற்றது நிர்மாலய மல்ல. சிவனும் பிரசன்னமாகமாட்டார் என்றுசொல்லுகையில் அந்த உபமன்னிய பகவானிடத்தில் சிவதீக்ஷைபெற்று சாம்ப சிவனையுபாசித்து சகலகாம மடைந்தாரென்று வாயு சங்கிதையில் உத்திரகாண்டத்தில் விரித்துச் சொன்னபடியாலும் பாரதம் உபமன்னிய வியாக்கியானத்திலும் பாத்மபுராணம் கூர்மபுராணம் மற்றபுராணங்களிலும் சங்கிரகமாகச் சொன்னதினாலும் அறிக. இதல்லாமலிராமபத்திர சுவாமி அகஸ்தியராச்சிரமத்துக்கு வந்துதான்வந்தவரலாறெல்லாம் சொல்லி பின்புபஞ்சவடி தீர்த்ததிலிருக்கையிற் சீதைவியோகம் வந்து வெகுதுக்கத்தினால் அகஸ்தியராச்சிரமத்திற்குவந்து கஷ்டப்படுகையில் தத்துவக்கியானம் உபதேசித்து கிலேசம் நின்ற பிறகு சீதேவியை அடையும் வழி கேட்கையில் சிவதீக்ஷைபண்ணிக் கொண்டுசாம்ப சிவனையுபாசித்தாற் சிவன்பிரசன்னமாய் அனுக்கிரகம் பண்ணுவாரென்று சொல்லுகையில் அந்தப்படியே அகத்தியரிடத்தில் தீக்ஷையடைந்து சாம்ப சிவனையுபாசித்தபின்பு சிவன்பிரசன்னமாய் சகல அஸ்திரசஸ்திரம் கொடுத்து சீதையை அடையும் வரமும் கொடுத்தார். இந்தக்கதை பாத்மபுராணம் உத்திரகாண்டத்தில் விரித்துச் சொல்லும் ராமாயணத்தில் பூர்வமகாதேவர் என்னும் சிவத்தையுங் கண்டுகொள்க. நாராயணர் அசுரருபத்திரவம் பொறுக்கமாட்டாமற் றேவதைகளுடன் வந்து வெகுகாலம் பயப்பட்டு சிவன்பிரசன்னமாய் சகலாபீஷ்டமும் நிறைவேறினதினாலும் பாசுபதவிரத முபாசித்தால்சிவன்

பிரசன்ன மாவரென்கிறதை கண்டுகொள்க. சத்திபதி ஞாயமாவது சத்திபதி புருடனிவர்களுக்கு எந்தஞாயமாய் வழிபடவேணுமென்று சொன்னகன்ம காண்டத்துக்கு விரோதமல்ல. அப்பதி விரதையாருக்கிறதிரி புருடன்கூடவந்த அதிதிகளுக்கு அர்க்கியமாதி ஆசமனீயங் கொடுத்து பத்தாவின் சமீபத்தில் ஆசனம்போட்டு இடம்பண்ணி இலைபோட்டு அறுசுவையுடன் அன்னம் பரிமாறி உபசாரங்கள் சொன்னாலும் அன்பும் பத்தாவினிடத்திலிருக்குமல்லாமல் எல்லாரிடத்திலுமிராது. ஆகையாற் சத்திபதி ஞாயம் கன்மகாண்டத்துக்கு விரோதமல்ல பதிவிரதா தன்மங்களுக்கு குறைவுமில்லை யென்றறிக. பாசுபதவிரதமென்று சகல சாஸ்திர நிர்ணயம். இந்த பாசுபதவிரதத்திற்கு பிரதானம் நாலு அதேதென்னிற் சிவலிங்கம் பஞ்சாக்ஷரம் விபூதி ருத்திராக்ஷம் இந்தநாலும் வைதிக சைவசின்னம்இதுவேசர்வோத்மம் இதற்குப் பிரமாணம் இதிற்சிவலிங்கம் உபாசிக்கிறதற்கு சர்வோத்தமம். அதேதென்னிற் சிவலிங்கம் நாதசொரூபம் ஆவிடையாளவிந்து சொரூபமென்று........பிரமாணமயம் சிவலிங்கத்துக்குதெக்ஷிணங்கம் பிர்ம சொரூபம் வாமனங்கம் விஷ்ணு சொரூபம். நடுருத்ர சொரூபமென்று கீழ் சத்திரூபமென்று சிவனுடைய நிட்கள சகள அடையாளத்தை காண்பிக்கையினால் சிவலிங்கமென்று இன்னும் சிவலிங் கத்திற்குவெகு பிரமாணம். ஆகையாற் இந்தச் சிவலிங்கமே உபாசிக்கிறது. சர்வோத்தமம் வாவிகூபம் தடாகங்கள் வெட்டுவதும் யாங்கள் வெகு தெக்ஷிணையுடனே சாங்கமாகப் பண்ணுகிறது சிவலிங்கத்துக்கு வந்தனம் பண்ணுகிற தினமேல கோடியிலொரு கூறுகாணாது என்றபாரதம் அனுசாசனிக வசனத்தினாலும் சிவலிங்கத்தை பிரதக்ஷிணம் பண்ணினாற் பதே பதேய சுவமேதயாகபலமென்றும் ஆகமங்களும் புராணங்களும் சொல்லுகிறதினாலும் சிவலிங்கத்தில்பிடேக நிவேத்தியம் பண்ணுகிற பதார்த்தங்களுக்குப் பலன் அசுவமேதயாக முதலான பலன்களை யொப்பிட்டு ஆகமங்களும் பாரதமும் சகலபுராணங்களும் சொல்லுகிறதினாலும் மகாபாபியாயினும் சிவபரார்த்த லிங்கத்தை தெரிசித்தவுடனே அந்தப் பாவத்தினின்றும் விடப்படுவனென்றும் சகலபுராண வசனத்தினாலும் சிவலிங்கமே சர்வோத்தமமென்று சகலசாஸ்திரநிர்ணயம். சாளக்கிராமத்தை பூசித்தாற் சகல தேவதைகளையும் பூசித்ததற்கு சரி அந்த மூர்த்தியை தியானம் பண்ணினாற் பதினாலுலகத்தையும் தானம்பண்ணின தற்குச்சரி. அந்ததீர்த்தம் புரோக்ஷித்துக் கொண்டால் கெங்கை முதலான தீர்த்தமெல்லா மாடினதற்குச்சரி. அதயிருக்கிற வீடு பௌத்திரம் ஆவாகனமும் உத்தியாபனமும் தேவையில்லை என்று சகலருஞ் சொல்லுகிற வசனத்திற்கு போக்கேதென்னிற் சாளக்கிராம

த்துக்கு அதனை ஆத்திகம் சொல்லுகிறது. சரி சிவலிங்க மகத்துவத்துக்கு முன்னேயிடல்ல. சிவலிங்கத்தை சுருதிஎடுத்து சொல்லுகிறதினாலும் சுயம்புதேவதம் ஆரிடம் மானிடம் நாலு விதமாகயிருந்து காசிமுதலான தலத்திலே அபிடேகனைவேத்தியம் கொண்டருளு கிறதினாலும் சிவலிங்கத்திலிருந்து ஆவிற்பமாய் சகலருக்கும் நிக்கிர கானுக்கிரகம் பண்ணிதிரோபவமாகிறதினாலும் சகல தேவதைகளிருடிகள் அசுரராக்ஷதர் மனிதர்திரியக்குகள் முதற் சிவலிங்கத்தில் பூசித்துபோகமோக்ஷ மடைந்தாரென்று சகல புராணங்களும் சொல்லுகிறதினாலும் சிவலிங்கத்திலடைந்த. ஆத்மாக்களனந்தமென்றும் சகலபுராணங்களும் சொல்லுகிறதினாலும் இந்த அஞ்சவகுப்பிலே ஒருவகுப்பாகிலும் சாளக்கிராமத்துக்கு உண்டாகி யல்லோ சிவலிங்கத்துக்கு ஒப்பாகவேண்டும். அந்த சாளக்கிராமத்துக்கு தேவதையாயிருக்கிற நாராயணர் முதலியோர் சிவலிங்கத்தைப்பூசித்து பதமடைந்தார்களென்று சுருதியும் சகலபுராணங்களும் சொல்லுகிறதினாலும் சிவலிங்கமே சர்வோத்தமமென்று சகலசாஸ்திர நிர்ணயம், சிவயோகத்திலுபாசித்தாலோ வென்னிற் சிவலிங்கஉபாசக பலன்வரமாட்டாது அதற்குப்பிரமாணம் பாரதம் துரோணபர்வத்தில் அசுவத்தாமா பாலனமாகியவாயுதங்களை திரகாரம்பண்ணுகையில் வியாசர்வந்து சிவலிங்கத்திற் பூசிக்கிறவன் அருச்சுனன். சிவரூபத்திற் பூசிக்கிறவனீயென்றும் உனக்கு அவனுடனே சரியாகாதென்று அசுவத்தாமனுக்குச் சொன்னவசனத்திற் கண்டுகொள்க, ஆகையாற் சிவலிங்கமே சர்வோத்தமம். இனிபஞ்சாக்ஷரமே சர்வோத்தமம். அதற்குப்பிரமாணம் நாலுவேதத்திலும் இரண்டாம் வேதமதிகம். அது எதினாலே யென்னிற் ஸ்ரீருத்ரமிருக்கிற படியினாலே ஸ்ரீருத்திரற்கு மும்நடுவிலே பஞ்சாக்ஷரமுமிருக் கிறபடியினாலே சத்தகோடி மகாமந்திரமும் போகப்பிரதம் யோகயெவபர மந்திரம் சிவஇத்ய க்ஷரதோயமென்கிறதினாலும் சிவசத்தத்துக்கு நிர்வசனம் வசகாந்தோவென்கிற தாதுவினாற் சோதிர்மய மென்றும் சிவம் பரமாத்மாவென்றும் வேதாந்தசாத்திரங்கள் கோஷிக்கிற படியினாலும் பிரமோத்ர காண்டத்தில் ராஜ குமாரனுக்கு கர்க்கர்பஞ்சாக்ஷர முபதேசித்தவுடனே பாபங்களெல்லாங்காக ரூபமெடுத்துக்கொண்டு மயிர்க்காம்பு வழியேஓடிப் போயிற்று என்றவசனத்தினாலும் மகாபாபியாயிருக்கிற வொருவன் சரீரபதனகாலத்தில் புத்திரனுக்கு ஆவசிகம் சொல்லுமிடத்தில் மந்திரவிக்கிரைஞ்சி சிவமாங்கிழவிக்கிரையஞ் சிவமென்று சொன்னவுடனே சீவிக்கையிற் சிவசாயுச்ச மடைந்தா ரென்கிற வசனம் சகலபுராணங்களிலும் பிரசித்தமானபடியினாலும் சிவ சிவவென்றால் முந்திசொன்னது சகலபாவத்தையும் போக்கும் பிந்திசொன்னது மூ

த்தியைக்கொடுக்குமென்றுசகலபுராணங்களிலும் சொன்னதினாலும் இன்னும்பிரமாணம் வெகுவாகையாற் பஞ்சாக்ஷரமே சர்வோத்தமமென்று சகலசாஸ்திரநிர்ணயம். அஞ்செழுத்தல்லோ பஞ்சாக்ஷரம் பிரணவமில்லையே பிரணவங்கூடினாற் சடாக்ஷர மல்லோ உலகப்பிரசித்தம் நாராயண மந்திரம் அட்டாக்ஷரமல்லோ. பிரவணவங் கூடியிழுக்குதே அதுவோரெழுத்தும் தன்னிற் சடாக்ஷரமன்றல்லோ விருக்கும். அட்டாக்ஷரம் வெகு பிரசித்தமல்லோ ஆகையாற் பிரணவங்கூடவிருக்கிறதல்லோ பெலமென்கிறதற்கு சகலமந்திரமும் பிரணவங்கூடி யல்லோபெலம், பஞ்சாக்ஷரத்துக்கு பிரணவங்கூடாமலே பெலம். சத்தகோடிமகா மந்திரத்திலே நிக்ருட்ட தேவதைகளுக்கு முதலாக மூலமந்திரம் பிரணவங்கூடி யிருந்தாலே பெலம் பஞ்சாக்ஷரத்துக்கு பிரணவங்கூடாதபோதே உக்கிரட்டமோ நிக்கிரட்டமாமென்றறிக இதுவல்லாமற் காயத்திரி மந்திரம் சதுர்விம்த்திய க்ஷரம்வெகு பிரசித்தமாய் நாலுவேதத்திற்கு மாதாவாகவழங்குகிறதற்கு கூடாதுவல்லோ இருப்பதினாலு அட்சரமப்படிபோலப் பஞ்சாக்ஷரமும் பெலம். சர்வமந்திரத்துக்கு பிரணவங்கூடினாலே பெலம். மற்றபடி பெலமில்லையென்றுசொல்லுகிற வசனத்துக்குப் போக்கேதென்னிற் "சர்வோசாரணம் லவணம்," பிரதான மென்றால் பாலுக்குலவணம் பிரதான மல்லவே. யப்படிப்போல பஞ்சாக்ஷரம் நீங்கலாக மற்றமந்திரத்திற் கெல்லாம் பிரணவம் பிரதானம். அஷ்டாக்ஷரம் சாங்கமாகக் கிரமச்சுருதி யில்லாததினாலும் பஞ்சாக்ஷரம் சுருதிநடுவே நாயகரத்தினமாக விருக்கையினாலும் பஞ்சாக்ஷரமே சர்வோத்தம மென்று சகலசாஸ்திர நிர்ணயம். வீபூதிருத்திராக்ஷம் வைதீகச்சைவ சின்னமென்று சாஸ்திரங்கள் நிச்சயித்த பிரகாரம் அக்ஷரமாலை என்றுசுருதி மிருதிபுராண இதிகாசங்களெல்லா மெடுத்துச் சொல்லுகிறதற்கு அக்ஷரமாலை என்றுபெயர் ருத்திராக்ஷ சத்துக்கெருத்திராக்ஷ சத்துக்கு நிர்வசனம் உருத்திரன் அக்ஷத்திலுண்டாகையால் உருத்திராக்ஷ மென்று நிர்வசனம். செபத்துக்குபலன் அங்குலியிறைமுத்துபவழம் படிகம்பொன் ரத்தினம் துளசிமணி குசைஅகாரதிக்ஷகராந்தம் அக்ஷரமாலை யென்றபேர். இதற்கெல்லாம் சங்கை சொல்லி உருத்திரக்ஷத்திற் செபித்தபலனதற்கில்லை என்றுசகல நூல்களும் சொல்லுகிறதினாலும் ருத்திராக்ஷத்தை தரித்தும் கண்டுதெரிசித்தும் அக்கியானத்திற்றிரியக்குகள் தரித்துகதிபடைந்தகதையைய சுருதிபுராணங்கள் கோஷிக்கிறதையுங் கண்டுகொள்க. அப்படியே சர்வோத்தம மென்றுசகல. சாஸ்திரநிர்ணயம். புராணத்திற் கூறுமிருடிகள் வீபூதிருத்திராக்ஷம் சடைதரியாதஇருடிகளில்லை பூலோகத்திலே வீபூதிருத்திராக்ஷம் தரிக்கிற பேரை

வைதீகாளென்று சொல்லுவார்கள். ஆகையால் விபூதி ருத்திராக்ஷமே சர்வோத்மம். ஆனபடியினாலே பாசுபதவிரதத்திற்கு அங்கமான சிவலிங்கா பஞ்சாக்ஷரம் விபூதிருத்திராக்ஷமே சர்வோத்மம். இதுசகலசாஸ்திரநிர்ணயம். இந்தஅங்கத்துடனே மந்திரங்கிரியா பாவனையினாலே யனேகப்பிரகாரமுபாசிக்கிறவனே பாசுபதவிரதி யவனுக்கே சிவபத்தி திடக்கியானம் வரும். மற்றவனுக்கு வாராது. இந்தச்சின்ன மில்லாமற்பத்தியுண்டாயிருந்தாலாமோ. வென்னிற்றிருமங்கிலியமுண்டானஸ்திரீகளுக்கே பதியுண்டு. திருமங்கிலியமில்லாத வளுக்குபதியில்லை. யென்றறிகிறாப்போல பாசுபத விரதத்திற்குட் பட்டவனுக்கே சிவபக்தி திடக்கியானமுண்டு. மற்றவனுக்கு இல்லையென்று சகலசாஸ்திர நிர்ணயம். சிவபத்தன் சர்வோத்தம னென்கிறதற்குப் பிரமாணம் சண்டாளனாகிலும் சகவாசம் சகபோசனம் அவனுடனே பண்ணலாமென்கிற உபநிடதமே பிரமாணம். சர்வோசிவமயம்.

மச்சராங்க முதலாவ ணுங்கமும்
வச்சிராங்கமு மில்லைமண் மீதினில்
அச்சிலா மிலிங்காங்கப காங்கமே
பிச்சகாளோம் பிராணல்ல தில்லையே

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

வி. குஞ்சிதபாதம் பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முப்பொருள் ஆராய்ச்சி.

தொகுதி-8-பகுதி-7-பக்கம்-157-தொடர்ச்சி.

கருத்தா ஆசாரியமூர்த்தமாய்த் திருமேனி கொள்ளுதல் வருமாறு.

"பிறவா முதல்வன் பிறந்தென்று முணர்வாய்நின்ற
ஞானக்கூத்த னொருமூர்த்தங் கொடுகுறுகி" என்றும்

'முன்னமீட்டிய தவத்தினாலே யிறையருளுருவாய்வந்து' என்றும்

'மன்னுமருட் குருவாகி வந்து' என்றும்

இப்படிச் சாத்திரங்களில் கர்த்தா தானே ஆசாரிய மூர்த்தமாய் திருமேனி கொண்டுவருவாரென்பதற்கு ‘மாயாவுருவன் மாயாவுருவினையே யானேய்ந்தவ ரெம்மனோரே’ என்றதனாற் குற்றமுண்டெனிற் கூடாது கர்த்தா ஆசாரிய மூர்த்தமாய்த் திருமேனிகொண்டு வருதலாவது மலநீங்கின வுயிரிலே சிவஞானம் வெளிப்பட்டு விளங்கித் தோன்றுதலாகையால். (௰௨)

சிஷனுக்கு ஆசாரிய சன்னிதானத்தில் வந்தபின் மலநீக்கமோ? வருமுன் மலநீக்கமோ? வந்தபின் மலநீக்கமானால் வந்தபேருக்கெல்லா மலநீங்கவேண்டும். அப்படி நீங்காதபடியால் வருமுன் மலநீங்கினதாம். வருமுன்னே மலம் நீங்கினால் ஆசாரியர் வேண்டுவதில்லையெனில் படலம் நீங்கின கண்ணுக்கு ஆதித்தன் காட்டுவதுபோல மலநீங்கின பக்குவான்மாக்களுக்கே ஆசாரியர் அறிவிப்பாராகையால் வருமுன் நீங்கல் கூடாது.

சுருதி குரு சுவானுபவ மூன்றனுள் முதன்மையாதென்னில் சுருதியுங் குருவாக்கும் சுவானுபவத்திற்குக் கருவியாகலின் சுவானுபவமே முதன்மை. ௰௪)

ஆன்மா நித்தியனாயிருக்கப் பிறந்தா னிறந்தானென்று சொல்லுகிறதெப்படி? ஆன்மா மாயா கருவியைப் பற்றி யறிதலே பிறப்பு. மாயா கருவியை நீங்கி அறியாமையே யிறப்பு. (௧௫)

பஞ்சகிருத்தியம் நித்தியமோ அநித்தியமோ? சித்தியார், ஐந்தாஞ் சூத்திரம். “வுயிர்க்கெல் லறிந்திடு மறிவுங், காட்டி வீட்டையு மளிப்பன் பேலோன்” என்று திருவுளம்பற்றி யிருக்கையினாலே பஞ்சகிருத்திய மநித்தியம். சித்தியார் ஆறுஞ்சூத்திரம், “என்றுந் தணவாத கருமமொன்றுந் தருவதுமில்லை” என்றும் நித்தியமாகத் திருவுளம்பற்றி யிருக்கை நித்தியம் பலவாதலா லவற்றிலொன்றி லடங்கும். (௧௬)

பஞ்ச கிருத்தியம் ஆன்மாவுக்கோ சரீரத்துக்கோ? நித்தியமாயிருக்கிற ஆன்மாவுக்குக் கூடாது. சரீரத்துக்கென்னில் சரீரம் சிருஷ்டி திதி சங்காரமாகிய முத்தொழிற் படுமிடத்து ஆன்மாவதிலழுந்து கையினாலும் திரோபவமு மநுக்கிரகமும் சரீரத்துக்கு இல்லாதபடியினாலும் பஞ்சகிருத்தியமும் ஆன்மாவுக்கே யாம். (௧௭)

ஆன்மா பஞ்சகிருத்தியப் படுதலாவது ஆன்மாவுக் கறிதற்றொழிலுண்டாகிறதே சிருட்டி. ஆன்மாவுக்கு அறிதற்றொழில் நிலைநிற்றலே திதி. ஆன்மாவுக்கு அறிதற்றொழில் நீங்கலே சங்காரம். ஆன்மாவுக்கு

அறிதற்கெழுமி னிகழுமிடத்துள்ள வறியாமையே திரோபவம். ஆன்மாவின் துன்பங்களைப் பொசித்து புண்ணிய பாவங்களைக் கழித்தலே அநுக்கிரகம். (௧௮)

ஒளியு மிருளு மோரிடத்திலே கூடி யிராததுபோல ஆன்மாவினிடத்திலே ஆணவமலமும் சிவமும் கூடியிராதே கூடியிருக்கிற தெப்படியென்னில் ஒரு மரத்தினிடத்தில் வேர்தொடுத்து நுனி பரியந்தம் ஈரமும் அக்கினியும் கூடியிருத்தல் போலும். (௧௯)

ஆன்மா நரகத்திலேகிடந்து அநுபவிக்குமிடத்து அந்த நரகவேதனை ஆன்மாவை விட்டு நீங்காத சிவனுக்கு முண்டென்னில் அது கூடாது. அதெப்படியென்னில் ஒருவன் வயிற்றிலே கிடக்கிற புழுப் படுந்துன்பமெல்லாம் அவனுக் கில்லாததுபோலும். (௨௰)

ஆன்மா கிஞ்சிக்ஞனோ சுதந்தர வீனனோ! கிஞ்சிக்ஞனென்றால் மின்மினிப்பூச்சுக்குப் பிரகாசிக்கிற சுதந்திரம் சிறிதுண்டானாற்போல ஆன்மாவுக்குத் தானே அறியும் சுதந்தரம் சிறிதுண்டாகவேணும். அப்படி யில்லாதபடியால் கேவலம் கிஞ்சிக்ஞனல்லன். சுதந்தர வீனனோவென்றால் சிவன் உபதேசித்த ஆகமமெல்லாவற்றையு மேககாலத்திலேயு மறிந்து ஏற்றுக்கொள்ள வேணும். அப்படியில்லாதபடியினாலே கேவலம் சுதந்தர வீனனல்லன். ஆகையினாலே ஆன்மா கிஞ்சிக்ஞத்தையுடைய சுதந்தர வீனனும். (௨௧)

ஆன்மா மோக்ஷத்தை யடையுமிடத்துக் கெட்டுக்கூடுமோ கெடாது கூடுமோ? ஆன்மா கெட்டாலுங் கூடமாட்டாது. கெடாதிருந்தாலுங் கூடமாட்டாது. இனிச்சித்தாந்தமெப்படியெனில் விஷயங்களிலேசெல்லு மான்மபோத நிகழ்ச்சிக் கெட்டுக்கூடுமெனக் கொள்க, (௨௨)

வியாபகம், வியாப்பியம் வியாத்தி ஆ ௩. வியாபகம் = நிறைவு, வியாத்தி = சமநிறைவு. வியாப்பியம் = ஒன்றிலொன் றடங்கின நிறைவு. சிவனுடைய வியாபகம் சமுத்திர வியாபகம்போலும். ஆன்மாவு மாணவமலமும் வியாத்தியாயிருத்தல் தண்ணீரும் உப்பும் வியாத்தியாயிருத்தல் போலும். சிவனுடைய வியாபகத்திலே ஆன்மாவு மாணவமலமும் வியாப்பியமாயிருத்தல் சமுத்திர வியாபகத்தில் தண்ணீரும் உப்பும் வியாப்பியமாயிருத்தல்போலும். (௨௩)

ஆன்ம வியாபகத்திற்குக் கண் முதலிய வுவமைகள் வருமாறு: கண் (௧) கண்ணொளி (௧) கண்ணொளிக்குக் காணுங்குணம் (௧) கண்ணொளிக்

குக் காணுந்தொழில்(க) இருள்(க) பதார்த்தம்(க) விளக்கு(க) விளக்கை யுண்டாக்குகிறவன்(க) ஆ அ. கண்ணைப்போலு மான்மா; கண்ணொளி யைப்போலு மான்மஞானம். கண்ணொளிக்குக் காணுங்குணத்தைப்போ லும் ஆன்மஞானத்துக் கறியுங்குணம். கண்ணொளிக்குக் காணுந்தொழிலை ப்போலும் ஆன்மஞானத்துக் கறியுந்தொழில். இருளைப்போலு மாணவ மலம். பதார்த்தத்தைப்போலும் சகதுக்கங்கள். விளக்கைப்போலும் மாயா சரீரம். விளக்கையுண்டாக்குகிறவனைப்போலுஞ் சிவன். விளக்குப் போனவிடத்துக் காணுந்தொழி லொன்றுமே போனது. போயின பொரு ளிரண்டு. இருக்கிற பொருள் ஆறு. (அ = உ = சா. (உச)

ஆன்மா வியாபகமாயிருந்து சரீரத்தைப் பற்றுதற்குப் படிகமலை அக் கினிமலைமுதலிய வுவமைகள்வருமாறு:- படிகமலை(க) படிகமலைக்கொளி(க) படிகவொளிக்குப் பற்றுங்குணம்(க) வன்னம்(க) வன்னத்தைக் காண்பிக் கிறவன்(க) ஆ ரு. படிகமலைப்போலுமான்மா. படிகமலைக்கு வொளி யைப்போலு மான்மஞானம். படிகவொளிக்குப் பற்றுங் குணத்தைப் போலு மான்மஞானத்திற் கறியுங்குணம். படிகவொளிக்குப் பற்றுந் தொழிலைப்போலு மான்மஞானத்திற் கறியுந்தொழில். வன்னத்தைப் போலு மாயா சரீரம். வன்னத்தைக் காண்பிக்கிறவனைப்போலுஞ் சிவன். படிகமலை யெந்தப்புறத்திலே வன்னத்தைக்கொடுத்தாலும் பற்றிக்கொள் ளும். அதுபோல வெல்லாப்புவனங்களிலும் வியாபகமாயிருக்கிற ஆன்மா. கர்த்தா எந்தப் புவனத்திலே சரீரத்தைக் கொடுத்தாலும் அந்தப் புவனத் திலே பற்றிக்கொண்டறியும்.

அக்கினிமலை(க) அக்கினிமலைக்கொளி(க) அக்கினியொளிக்குச் சுடுங் குணம்(க) அக்கினியொளிக்குச் சுடுந்தொழில்(க) பஞ்சு(க) பஞ்சைப் பற் றுவிக்கிறவன் (க) ஆ சு. அக்கினிமலை யெந்தப்புறத்தில் பஞ்சைக்கொ டுத்தாலும் பற்றிக்கொள்ளும். அதுபோல வெல்லாப் புவனங்களிலேயும் வியாபகமாயிருக்கிற ஆன்மாவும் கர்த்தா யெந்தப்புவனத்தில் சரீரத்தைக் கொடுத்தாலும் அந்தப் புவனத்தில் பற்றிக்கொண்டறியும். (உரு)

ஆன்மா சார்ந்ததின் வண்ணமாயிருக்குமென்பதற்கு ஆகாசமுதலிய வுவமை வருமாறு. ஆகாசமான திருளொடு கூடினால் இருளாய் நிற்கும். ஒளியொடு கூடினால் வொளியாய் நிற்கும். அதுபோல வான்மா மலத் தோடு கூடினால் மலமாய் நிற்கும். சிவத்தொடுகூடினால் சிவமாய்நிற்கும்.

எண்ணிறந்தகோடி புவனங்களிலிருக்கிற எண்ணிறந்தகோடி யான் மாக்களுக்கும் அறிவுந் தொழிலும் நடத்தலினாலே சிவன் வியாபகரென வறிக. (உஎ)

எண்ணிறந்த கோடி யான்மாக்களுக்கு மறியாமை யிருத்தலினாலே ஆணவமலம் வியாபகமென வறிக (உ௮)

எண்ணிறந்த கோடி யான்மாக்களுக்கு மெண்ணிறந்தகோடி புவனங்களிலே தனுகரணாதியிருத்தலால் மாயை வியாபகமென வறிக, (உ௯)

எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்கு மெண்ணிறந்த புவனங்களிலே பொசிப்பிருக்கையினாலே கன்மம் வியாபகமென வறிக. (௩௰)

(இன்னும் வரும்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சூர சங்கார விளக்கம்.

ஓர் காலத்து தேவாசுரர் மானுடர் மந்தரென்னுஞ் சாதி அந்தணர் முதலியோர் சிறந்து விளங்கப்பட்டுள்ள சாகதீபத்துப் பிரபாகரன் என்னும் அரசனது மனைவி சுகுமாரியின் வயிற்றில் அவ்வரசன் றவத்தானுதித்து வழிமுறைப் பெயரைக் கொண்ட சூரன், பதுமன், சிங்கன், தாரகன் என்னும் நால்வர் எண்ணி யியற்றிப் பெற்றுக்கொள்ளாத விரதத்தைக் காண்டல் வேட்டையாடல் என்னுங்கிரியைகளால் ஒருவாறடைந்து வாழுங்காலத்து, அவர் சபையில் சத்திய முனிவர் செல்ல, அவரை இவ்வரசர்கள் வணங்கி உபசரித்ததன்மேல், அவர் கருணைகூர்ந்து அவர்கள் நால்வரையுமழைத்து, "நீங்கள் பெற்றுக்கொண்ட புண்ணிய பலத்தினால் யான் உங்களுக்கு ஓர் வசனஞ் சொல்கிறேன். அது யாதெனில், அனந்தானந்த கரண சேட்டணங்கள் ஒளிரும் குகமய பரசிவந்தை வழுத்துங்கள். அப்படி வழுத்துகில் நீங்களெண்ணியவற்றைப் பெற்றுக்கொள்வீர்க"ளென்று திருவாய்மலர்ந்து மறைய, அந்நால்வர்களுந் தங்கள் புதல்வர்மாட்டுப் பூமிபாரங்களை யேற்றித் தாங்கள் தவ யோகிகளாய் உலக வாழ்க்கையை முற்றத் துறந்து, சம்புத் தீவி லுள்ள காஞ்சிபுரத்தையடைந்து, அத்தலத்தில் வேதமே வடிவமாகவுடைய பரமசிவம், பார்வதியம்மையார் இயற்றும் தவத்தை யேற்றருளி அவ்வம்மையார் திருமேனியில் நிழலியற்ற வேண்டுமென்னும் கருணையினால் மாமரவடிவாக உற்றதும், ஐந்துவிட்டுணு

கற்பங்களைக் கண்டதுமாகிய மாமர நிழலிலே குமாரராகிய குகனைத் தியானஞ்செய்து சூரனென்பவன் அக்குமார நாயகருக்கு வாகனமாகவும் பதுமன் கோழிக்கொடியாகவும் சிங்கன் சிங்கபீடமாகவும், தாரகன் யானையூர்தியாகவும் கருதி அருந்தவ மியற்றினர்.

இவ்வாறாகவே, விண்ணுலகிலுள்ள இந்திரர் முதலியோர்கள் ஸ்ரீ கைலாயத்திற்சென்று விநாயகரையும் பரமசிவனையும் தேவியாரையும் வணங்கிக் கந்தகிரியிலுள்ள குமார நாயகரைத் தரிசிக்கும் பொருட்டுச் சென்று அக்கடவுளாரது திரோத சத்தியான மயிலை வணங்கி விடைபெற்றுக் குமார சுவாமியை வணங்கி மீட்டும் வந்து மயிலைப்போற்றி, "அழகிய மயிலே! குமரர்க்கான சந்தநல் யானமே! நின் தலைமையும் சிறிது நாளில் ஒழிந்து விடுமோ தெரிந்திலேம் இதற்கு ஏது யாதெனச் சொல்வேம்; கேட்குதி. சாகத்தீவிலுள்ள பிரபாகரன் என்னும் இராசன் றன் குமாரர்கள் காஞ்சிபுரத்துக்குச்சென்று குமாரக்கடவுளுக்கு வாகனம் முதலிய சின்னங்களாகும்படி அருந்தவ முயல்கின்றனர். அத்தவம் இன்னுஞ் சிறிதுநாளில் முற்றுப்பெறில் அக்குமாரக்கடவுள் அவர்கள் எண்ணியபடி வரத்தைக்கொடுப்பார். எப்படியேனும் நீ இந்த அரசிலிருத்தலே உத்தமம்" என்று சொல்லி அவர்கள் செல்ல, மயிலானது கேட்டுத் திகைத்துச் சில பூதகணங்களையும் புஷ்ப விமானத்தையும் காஞ்சிப் பதிக்கனுப்பி அந்நால்வரு மியற்றுந்தவத்தை முற்றுப்பெறவொட்டாது அவர்களைச் சாலோக பதத்திற் சேர்த்தது அங்கே அவர்கள் யோகந்தெளிந்து, திகைத்து, பூதரிற் றலைவனாகிய அண்டாபரணனால் நடந்த செய்கைகளை அறிந்து தேவர்களுக்கு நாங்கள் யாதோர் கொடுமையுஞ் செய்யாதிருக்க அவர்கள் எங்கள் அருந்தவத்தைக் கெடுத்தனரே: ஆதலால் அவர்கள் செருக்கை மாற்றும் காலம் வரும்வரைக்கும் இங்கிருப்பேமெனப் பேசித் தெளிந்து பூதர்களோடு கலந்திருந்தனர்.

இஃதிவ்வாறிருக்க, குமாரக்கடவுளைத் தரிசனஞ்செய்தற்கேற்ற புண்ணிய காலம் வந்துழி முற்கூறிய இந்திராதி தேவர்கள் கந்தகிரியையடைந்து தத்தம் வாகனங்களை வாயிலில் நிறுத்தி மயிலைவணங்கி விடைபெற்று ஆலயத்துட் பிரவேசித்தனர். சூரன் முதலிய நால்வரும் தம் பகையை முடித்தற்குக் காலம் இதுவென்று கண்டு; மயிலினிடம் சென்று வணங்கி, பிரம விட்டுணுக்களும் நின்னைப் போற்றி அநுஞ்ஞைபெற்றுச் சந்நிதியையடைகின்றார். அவர்கள் வாகனங்களோ செருக்குற்று நின்னை யற்பமாய் மதித்து இழிவுரை பகர்ந்தும் இங்கே உனக்கினியார்போல் விளங்குகின்

றன என்றனர். அவற்றைக் கேட்ட மயிலானது ஒன்றையும் யோசிக்காது சினந்து கருடன் அன்னம் ஐராவதம் மூன்றையும் வதைத்துச் சினந்தணிந்து முன்போல் வாயிலிலிருந்தது விட்டுணுவாதி தேவர்கள் ஆலய தரிசனஞ்செய்து திரும்பி மயிலியற்றியவைகளைத் தெளிந்து குமாரக்கடவுளிடம் விண்ணப்பஞ்செய்ய, அப்பெருமான் மயிலைநோக்கி உன் செருக்கொழியும்படி நீ மலையின் வடிவெய்திச் சென்று பாண்டிதேசத்தை யடைந்து அருந்தவஞ்செய்து மீளுதி எனக் கட்டளைசெய்தபடி; அது அப்பாண்டிதேசத்திலே "மயூரகிரி" என்னும் பெயர் பெற்றிருந்து தவமியற்றிப் பின்னர் சாலோக பதவிபெற்றது. அங்ஙனமே சூரன் முதலிய நால்வரையும் அழைத்து, 'அரசபூதர்களே! நீவிர் இயற்றிய அகிர்த்தியங்களை சேனைகளாகவும் சூரன் பதுமன் என்னும் இருவரும் ஒரே உடல்கொண்டு சூரபத்மன் என்னும் பெயரோடு மற்ற இருவரும் அவ்வப் பெயரோடும் பிரம புத்திரராகிய காசிபருக்கும் அவர் மனைவியாராகிய மாயைக்கும் புத்திரர்களாகப் பிறந்து, அருந்தவஞ்செய்து, வரங்களைப்பெற்று ஆயிரத்தெட்டண்டங்களையும் நூற்றெட்டு யுகத்துக் கரசாண்டு தேவர்களை வருத்த, அத்தேவர்கள் தமது வருத்தங்களைப் பரமசிவனிடம் முறையிட, அக்காலத்து அப்பரமசிவத்தின் ஆறு திருமுகங்களிலுள்ள நெற்றிக் கண்களினின்று வியத்தம், அவ்வியத்தம், சமவர்த்தம், காணாப்பிரமம், பிங்களம், இந்து சோகிதம் என்னும் பொறிகளாய் நாம் உதித்து ஞானசத்திதரர், கந்தர், சேனானி, தாரகாந்தர், சுப்பிரமணியர், கௌமாரர், கெங்காதரர், கார்த்திகேயர், குமாரர், வல்லி கல்யாண சுந்தரர், கிரவுஞ்சகாரி, சண்முகர், சிகிவாகனர், பிரமசாரி, குகர் என்னும் நாமங்கள் துலங்க எழுந்தருளி உங்கள் அஞ்ஞானத்தை நிவர்த்திசெய்து மெய்ஞ்ஞான நிலையாகிய பதவியைத் தருவோமென் றுரைத்து அவ்வாறே அச்சூரபத்மனாதியோர்களைச் சங்கரித்து அவர்கள் முன் விரும்பிய பதவிகளைக் கொடுத்தருளினர்.

சூரன் பதுமன் என்னும் இருவரும் ஒரு சரீரம்கொண்டு பிறந்தமை பற்றியே அச்சரீரம் வேலினால் இருகூறுகப் பிளக்கப்பட்ட பின்னர் அவ் விருகூறும் சேவலு மயிலுமென இருவடிவாய் வந்தன.

சுப்பிரமணிய சுவாமி சூரன் பிறந்த பின்னரே அவனைக் கொல்லுதற்பொருட்டுச் சீகண்ட பரமசிவனது நெற்றிக்கண்ணிற் றோன்றினரென்று கந்தபுராணங் கூறியிருக்க, சூரனது பிறப்புக்குச் சுப்பிரமணிய சுவாமியுடைய சாபத்தை காரணமென்ற தென்னையெனில், அங்கே கூறி

யது அவாந்தர சிருட்டியிற் றோற்றத்தை. சுப்பிரமணிய சுவாமி பிரதம மகா சிருட்டியிலே மகேசுரருடைய இருதயத்தினின்றும் தோன்றினவ ரென்றறிக.

சூரனை இருபிளவாக்குமுன் அவன் நின்ற மாமர வடிவமானது, அசுரர்களெல்லாரும் தம்முட னெதிர்த்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்த மாமரத்தை யென்க.

## வள்ளியம்மை திருமணம்.

ஸ்ரீ வைகுந்தத்திற்குக் கண்ணுவமுனிவர் எழுந்தருளியபோது, அம்முனிவருக்கு விஷ்ணு முதலிய யாவரும் மரியாதை செய்யாதிருந்தார்கள் அதுகண்ட முனிவர் கோபங்கொண்டு விஷ்ணுவை நோக்கி என்னை அவமதித்தபடியால் நீ பூமியில் ஊமனாகப் பிறக்கக் கடவாய் உன் மனைவியாகிய இலக்குமிதேவி மானாகப் பிறக்கக் கடவள். உபேந்திரன் வேடனாகப் பிறக்கக் கடவன் என்று சாபமிட்டுப்போனார். அவ்வாறே கோவிந்தமூர்த்தியானவர் பூமியில் சிவமுனிவராயும், இலக்குமி மானாகவும், உபேந்திரன் வேல்நம்பி என்னும வேடராஜனாகவும் பிறந்தனர். சிவமுனிவர் இருக்கும் காட்டில் சென்ற மான் அவர் நோக்காற் கருப்பமடைய, திருமாலின் கண்களினின்றுந்தோன்றிய சுந்தரவல்லி யென்பார் குமாரக் கடவுளினிச்சைப்படி தம்முருவை விடுத்துச் சூக்குமதேகத்துடன் சென்று தொண்டைநாட்டின்கணுள்ள வள்ளிமலையிற் காலம் பார்த்திருந்தவராதலால், அவர் அம்மானின் கருப்பத்தையடைய, கருக்கொண்ட மான்பிணையொன்று, வள்ளிக்கிழங்கெடுத்த குழிநெடுவனோர்மகவை யீன்று சென்றது. அக்குழந்தையை வேல்நம்பி கண்டெடுத்து வள்ளிக்கொடியிலிருந்து கண்டெடுத்த காரணத்தால் வள்ளியென்று பெயரிட்டு வளர்த்து வந்து, சுப்பிரமணியக் கடவுளுக்கு விவாகஞ் செய்துகொடுத்தான். இதுவே சரித்திரம்.

பாலசந்திரன்.